**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.46/2014**

2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09-ஆம் நாள் **வா.சா.1** சாட்சி **திரு.நடராஜன்** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : **திரு.நடராஜன்** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**வா.சா. : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

12.12.1973ம் தேதியிட்ட காளிமுத்து கவுண்டர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 12.03.2013ம் தேதியிட்ட காளிமுத்து கவுண்டரின்

வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 05.03.2013ம் தேதியிட்ட காளிமுத்து கவுண்டிரின் பெயரிலுள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 05.03.2013ம் தேதியிட்ட A பதிவேடு கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 01.02.2013ம் தேதியிட்ட 4,5 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்று நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், 26.08.2013ம் தேதியிட்ட 1, 2 பிரதிவாதிகளுக்கு வாதி வழக்குரைஞர் கொடுத்தி பதிவு நோட்டீஸ் அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், 26.08.2013ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி நோட்டீஸ் பெற்றுக்கொண்டதற்கான ஆதரவு அசல் **வா.சா.ஆ.7** ஆகவும், 10.09.2013ம் தேதியிட்ட 1, 2 பிரதிவாதி வழக்கறிஞர் வாதிக்கு கொடுத்த பதில் நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.8** ஆகவும், 28.09.2013ம் தேதியிட்ட வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்குக் கொடுத்த கூடுதல் பதில் நோட்டீஸ் அலுவலக நகல் **வா.சா.ஆ.9** ஆகவும், 17.03.2010 மற்றும் 01.02.2011ம் தேதியிட்ட காளிமுத்து கவுண்டர் பெயரில் வாதி நகராட்சியில் பணம் செலுத்திப்பெற்ற வீட்டுவரி ரசீது எண்ணிக்கை - 2 அசல் **வா.சா.ஆ.10** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள். 09.12.2024